# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

TNBEF- AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை -600 001
தொலை பேசி : 044-25358718, 9444058718 மின் அஞ்சல் : ubeutn@gmail.com

சுற்றறிக்கை எண்:138:2016 நாள்: 17.05.2016

அன்பார்ந்த தோழர்களே,

- **அகில இந்திய வங்கித்துறை வேலைநிறுத்தம் !**
- **ஜூலை 29, 2016 - ஒரு நாள் வேலைநிறுத்தம் !!**
- **வங்கி தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அறைகூவல் !!!**

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் அரசின் வங்கித்துறை சீர்திருத்தங்களுக்கு எதிராக மே 25, 2016 ஒரு நாள் வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்திருந்தது. பிற சங்கங்களும் அந்த வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்ள முன்வந்தன் காரணமாக அந்த வேலைநிறுத்தம் ஒத்திவைக்கப்பட்டது.

வங்கித் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் (United Forum of Bank Unions - UFBU) கூட்டம் கடந்த 11.05.2016 அன்று ஹைதராபாத் நகரில் நடைபெற்றது. அரசு வங்கித்துறையில் மேற்கொண்டு வரும் சீர்திருத்தங்கள், ஊழியர் நலன்களுக்கு எதிரான செயல்பாடுகள், தொழிலாளர் சட்டங்களில் மேற்கொள்ளவுள்ள மாற்றங்கள் ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக்கொண்ட வங்கித் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு, ஜூலை 29, 2016 அன்று ஒரு நாள் அகில இந்திய வேலைநிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்துள்ளது.

பணி நிரந்தரம் செய்யப்படாத அதிகாரிகளும், ஊழியர்களும் இந்த வேலைநிறுத்தத்தில் அவசியம் கலந்துகொள்ளவேண்டும் என்ற முடிவினை வங்கி தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு ஏற்கனவே எடுத்துள்ளது. எனவே, பணி நிரந்தரம் செய்யப்படாத அதிகாரிகளும், ஊழியர்களும் இந்த வேலைநிறுத்தத்தில் அவசியம் கலந்துகொண்டு இந்த வேலைநிறுத்தத்தை வெற்றிகரமாக்கிட வேண்டுகிறோம்.

நமது தோழர்கள் அனைவரும், வழக்கம்போல, உணர்வுப்பூர்வமாக வரும் **29.07.2016 அன்று நடைபெறவுள்ள வேலைநிறுத்தத்திலும்**, அது தொடர்பாக நடைபெறவுள்ள பேரணிகள், ஆர்ப்பாட்டங்களிலும் கலந்துகொண்டு யூனியன் வங்கியில் இந்த வேலைநிறுத்தத்தை முழுமையாக வெற்றிபெறச்செய்திட வேண்டுகிறோம்.

## பாரத ஸ்டேட் வங்கியுடன் துணை வங்கிகள் இணைப்பு

பாரத ஸ்டேட் வங்கியின் துணை வங்கிகளான, ஸ்டேட் பாங்க் ஆப் பிகானிர் அண்டு ஜெய்பூர், ஸ்டேட் பாங்க் ஆப் ஹைதராபாத், ஸ்டேட் பாங்க் ஆப் மைசூர், ஸ்டேட் பாங்க் ஆப் பாட்டியாலா, ஸ்டேட் பாங்க் ஆப் திருவாங்கூர் ஆகிய வங்கிகளை பாரத ஸ்டேட் வங்கியுடன் இணைப்பதற்காக கடந்த 17.05.2016 அன்று துணை வங்கிகளின் நிர்வாக போர்டு கூட்டம் நடத்தப்பட்டு, அந்த வங்கிகளை பாரத ஸ்டேட் வங்கியுடன் இணைப்பதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து வரும் 20.05.2016 அன்று அனைத்து துணை வங்கிகளையும் சார்ந்த ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்யவுள்ளனர்.

## 10வது இருதரப்பு ஒப்பந்தம் - விளக்கம்

01.11.2012 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட 10வது இருதரப்பு ஒப்பந்தத்தில் பல வங்கிகளில் ஏற்பட்ட நடைமுறை சிக்கல்களை அடுத்து, இந்திய வங்கிகள் சங்கம் விளக்கங்களை வழங்கியுள்ளது.

10வது இருதரப்பு ஒப்பந்தத்திற்கு முன்பாக, அதிகபட்ச அடிப்படை சம்பளம் பெற்ற எழுத்தர்கள், JAIIB/CAIIB படித்து முடிக்கும்போது, Professional Qualification Allowance (PQA) வழங்கப்படும். அவர்களது தேக்கநிலை ஊதியம் (Stagnation Increment) வழக்கம் போல வழங்கப்படும். 10வது இருதரப்பு ஒப்பந்தத்திற்குப் பின், அவர்களுக்கு வழங்கப்படும் தேக்கநிலை ஊதியம், படிப்புக்கு ஏற்ப முன்பே வழங்கப்படும். (JAIIBக்கு ஒரு வருடம், CAIIBக்கு இரண்டு வருடம்). ஒப்பந்தத்தின்படி 01.11.2012 முதல் வழங்கப்படவேண்டிய ஊதிய உயர்வு பல வங்கிகளில் 01.05.2015 முதல் வழங்கப்படுகிறது. எனவே இது குறித்து இந்திய வங்கிகள் சங்கம் விளக்கம் அளித்துள்ளது. அந்த விளக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

**Indian Banks' Association**

**HR & INDUSTRIAL RELATIONS**

No.CIR/HR&IR/2016-17/XBPS/**281**
**May 13, 2016**

Chief Executives of Member Banks which are parties to the
X BPS dated 25.5.2015

Dear Sir/Madam,

**Adjustment/advancement of Stagnation increment to employees who acquire JAIIB/CAIIB/Graduation after reaching maximum of scale of Pay**

We refer to our Circular No.CIR/HR&IR/2015-16/XBPS/1120 dated 25.7.2015, inter alia clarifying the advancement of stagnation increment to non-subordinate employees who acquire JAIIB/CAIIB/Graduation after reaching maximum of scale of Pay, in terms of Clause 11 of X BPS dated 25.5.2015. We further clarified that such advancement would be w.e.f. 1.11.2012 or the actual date of such advancement whichever is later.

We are informed by one of the Workmen Unions that some of the bank managements are implementing this provision but only w.e.f. 1.5.2015 as in the case of improvements of stagnation increment under Clause 5 of the Settlement, in spite of clarification issued by IBA vide its Circular dated 25.7.2015.

Hence, we reiterate that while the benefit of Clause 11 of BPS (advancement of stagnation increment(s) on account of acquiring JAIIB/CAIIB/Graduation after reaching maximum of the scale of pay (in case of JAIIB/CAIIB/Graduation) or after reaching 19th stage of scale of pay (in case of CAIIB/Graduation) and has not earned increment(s), otherwise entitled on account of acquiring such qualification, when there were no increments to provide in the scale of pay of those employees, the stagnation increment in such cases may be advanced by one year or two years as the case may be, **which would be w.e.f. 1.11.2012,** whereas the effect of preponement of stagnation increment from three years to two years for the 6th stagnation increment, would be as per the clarification given vide our Circular No.HR&IR/CIR/2015-16/B/90/1377 dated 19.9.2015.

Member banks may please be guided as above.

Yours faithfully,
Sd..
**K UNNIKRISHNAN**
**DEPUTY CHIEF EXECUTIVE**

**<u>ஈட்டு விடுப்பு (Privilege Leave) குறித்த விளக்கம்:</u>**

சில வங்கிகளில் 2015ஆம் ஆண்டிற்கு ஈட்டு விடுப்பை கணக்கில் சேர்கும்போது, 01.06.2015 முதல் ஒப்பந்தம் என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, ஏற்கனவே 240 நாட்கள் விடுப்பு கணக்கிலுள்ள தோழர்களுக்கு, அந்த ஆண்டிற்கு 15 நாட்கள் மட்டுமே விடுப்பு வழங்கப்படுகிறது. அதாவது 01.01.2015 அன்று 240 நாட்கள் கணக்கிலுள்ள தோழர்களுக்கு, 2015ஆம் ஆண்டிற்கு 30 நாட்கள் வழங்கப்பட்டு, அவர்களது மொத்த விடுப்பு 270 நாட்களாக உயர்த்தப்படவேண்டும். அதற்கு பதிலாக 255 நாட்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. எனவே இது குறித்து இந்திய வங்கிகள் சங்கம் விளக்கம் அளித்துள்ளது. அந்த விளக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

**Indian Banks' Association**

**HR & Industrial Relations**
No.CIR/HR&IR/2016-17/XBPS/232
May 7, 2016

To,
Designated Officers of Member Banks which are
parties to the Bipartite Discussions

**BPS/Joint Note dated 25.5.2015 - Accumulation of Privilege Leave beyond 240 days upto Maximum of 270 days – Clarification**

We refer to Clause 30 of BPS/Para 20 of Joint Note dated 25.5.2015 with regard to accumulation of PL beyond 240 days, the relevant provisions are reproduced as under:

**BPS**

In partial modification to Clause 8 of Bipartite Settlement dated 29.6.1990, Privilege Leave accruing to an employee on or after the date of this settlement, shall be allowed to be accumulated beyond 240 days up to a maximum of 270 days. However, encashment of privilege leave shall be restricted up to a maximum of 240 days.

**JOINT NOTE**

On or from 1.6.2015 under Regulation 33(4) of Officers' Service Regulations, 1979/82, Privilege Leave may be accumulated up to not more than 270 days except where leave has been applied and it has been refused. However, encashment of privilege leave shall be restricted up to a maximum of 240 days.

We have been receiving queries from member banks as to whether the accrual of PL beyond 240 days shall be calculated from 1.6.2015 or from the beginning of the Calendar Year 2015 (April 2015 in the case of SBI)?

**Clarification**

We are of the view that since accrual/ credit of PL for the previous year is being given on the first day of the next year, banks may calculate PL accrual from January/(April of 2015 in the case of SBI) and not on pro-rata basis w.e.f. 1.6.2015.

Banks may please be guided as above.

Yours faithfully,
Sd..
K Unnikrishnan
Deputy Chief Executive

தோழமை வாழ்த்துக்களுடன்,

**(அ.சிதம்பரம்)**
**பொதுச் செயலாளர்**